www.Padasalai.Net www.CBSEtips.in

2MD

# இரண்டாம் இடைப்பருவத் தேர்வு – 2022

12 - ஆம் வகுப்பு

## வணிகவியல்

மதுரை மாவட்டம் 16-11-22

காலம் : 1.30 மணி மதிப்பெண்கள் : 50

பிரிவு – I

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். (15 * 1 = 15)

1. நுகர்வோர் சங்கங்களின் சர்வதேச அமைப்பு (IOCU) முதன் முதலில் நிறுவப்பட்டது
   a) 1960 b) 1965 c) 1967 d) 1987
2. நுகர்வோர் பாதுகாக்கப்பட வேண்டும்
   a) தயாரிப்பு குறைபாடுகள் b) தயாரிப்புகளின் குறைபாடுகள்
   c) ஒழுங்கற்ற மற்றும் கட்டுப்படுத்தப்பட்ட வணிக நடைமுறைகள்
   d) மேலே உள்ள அனைத்தும்.
3. ஜி.எஸ்.டி. என்பது______, ______, ______.
   a) சரக்குகள் மற்றும் சமூகவரி b) சரக்குகள் மற்றும் சேவைகள்வரி
   c) சரக்குகள் மற்றும் விற்பனை வரி d) சரக்குகள் மற்றும் சம்பளவரி
4. புதியபொருளாதாரக் கொள்கை ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது ______.
   (அ) 1980 (ஆ) 1991 (இ) 2013 (ஈ) 2015
5. __________ பொருட்கள், சேவைகள், மூலதனம் மற்றும் உழைப்பு ஆகியவற்றை ஊக்குவிப்பதற்காக தேசிய பொருளாதாரங்களுக்கு இடையில் தடைகளை அகற்றுவதால் ஏற்படும் விளைவுகளாகும்.
   (அ) தனியார் மயமாக்கல் (ஆ) தாராள மயமாக்கல்
   (இ) உலக மயமாக்கல் (ஈ) வெளிநாட்டு வர்த்தகம்
6. பொருளின் மீதான உரிமை என்பது
   அ. பொருளின் உடைமை ஆ. பொருளைப்பாதுகாத்தல்
   இ. பொருளின் மீதான அனுபவ பாத்தியம் வைத்திருப்பவர் ஈ. இவற்றில்ஏதுமில்லை
7. சரக்கு விற்பனைச் சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு
   அ. 1940 ஆ. 1997 இ. 1930 ஈ. 1960
8. எத்தனை மாதங்களுக்கு பின் காசோலை காலாவதியாகிறது?
   அ. 3 மாதங்கள் இ. 5 மாதங்கள் ஆ. 4 மாதங்கள் ஈ. 1 மாதங்கள்
9. மாற்று முறை ஆவணச்சட்டம் எந்த ஆண்டு இயற்றப்பட்டது?
   அ) 1981 ஆ) 1881 இ) 1994 ஈ) 1818
10. கீழ்குறிப்பிடப்பட்டுள்ள எந்தெந்த பண்புகள் தொழில் முனைவோர்க்கு உரித்தானவை?
    அ) துணிகரஉணர்வு ஆ) நெகிழ்வுத்தன்மை
    இ) தன்னம்பிக்கை ஈ) அனைத்தும்
11. கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளில் எது வணிகப் பணியை சார்ந்து இருக்காது?
    அ) கணக்கியல் பணி ஆ) ஒருங்கிணைப்பு
    இ)வாய்ப்பை கண்டறிதல் ஈ) திட்டமிடல்
12. தெளிவான தொழில் முனைவோரின் நோக்கம்
    அ) சேவைபுரிதல் ஆ)இலாபம் ஈட்டல்
    இ)தகுநிலை எட்டுதல் ஈ) ஆ மற்றும் இ
13. புதிதுபுனைதல் மற்றும் தொழில் முனைவோர் கலாச்சாரத்தை ஊக்குவிக்க இந்திய அரசு ________ முயற்சிக்கிறது.
    அ) AIM ஆ) STEP இ) SEED ஈ) AIC
14. பொருத்துக

| | | |
|---|---|---|
| A) பணி சார் வகைப்பாடு | - | i) புதுமைபடைக்கும் தொழில் முனைவோர் |
| B) தொழில் சார் வகைப்பாடு | - | ii) வேளாண் தொழில் முனைவோர் |
| C) செயலூக்கம் சார் வகைப்பாடு | - | iii) தூண்டப்பட்ட தொழில் முனைவோர் |
| D) மேம்பாடு ஒட்டிய வகைசார் | - | iv) முதல் தலை முறை தொழில் முனைவோர் |
| E) உரிமை சார் வகைப்பாடு | - | v) அரசு தொழில் முனைவு |



Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

குறியீடு:

| | A | B | C | D | E |
|---|---|---|---|---|---|
| அ) | i | ii | iii | iv | v |
| ஆ) | ii | v | i | iii | iv |
| இ) | ii | iv | iii | i | v |
| ஈ) | i | iii | ii | iv | v |

15. கூற்று (A) : ஒப்பந்தத்தில் ஒரு பொருளுக்கு துணையாக உள்ள கூற்று நம்புறுதியாகும்.
காரணம் (R) : நம்புறுதிகளை மீறுதல் நட்ட ஈடு வழங்க வழி வகுக்கும்
அ) A மற்றும் R சரி மேலும் R என்பது A யிற்கான சரியான விளக்கம்
ஆ) A மற்றும் R சரி மேலும் R என்பது A யிற்கானதவறான விளக்கம்
இ) A சரி ஆனால் R தவறு ஈ) A தவறு ஆனால் R சரி

பிரிவு – II (5*2=10)

குறிப்பு: ஏதேனும்ஐந்துகேள்விகளுக்குப்பதிலளிக்கவும் வினாஎண்.22ற்குகட்டாயமாகபதிலளிக்கவும்

16. மாநில ஆணையத்தின் உறுப்பினர்கள் யார்?
17. VUCA-ஐ விவரி.
18. தனியார் மயமாக்கல் என்றால் என்ன?
19. நிகழ் சரக்கு என்றால் என்ன?
20. மேலெழுத்துவரையறு
21. மாதிரியை பின் பற்றும் தொழில் முனைவோர் என்பவர் யார்?
22. பிரேமா என்பவர் இளங்கலை வணிகவியல் பட்டம் பெற்று பிறரிடம் மாத சம்பளத்திற்கு வேலைக்கு செல்ல மனமில்லாமல் தேனீ வளர்ப்பு பயிற்சி மையத்தில் சேர்ந்து பயிற்சி பெற்று தேனீ வளர்ப்பு தொழில் ஈடுபடுகிறார் . இவர் எவ்வகை தொழில் முனைவர்?

பிரிவு – III (5*3=15)

குறிப்பு: ஏதேனும் ஐந்து கேள்விகளுக்குப் பதிலளிக்கவும். வினா எண். 29 -ற்கு கட்டாயமாக பதிலளிக்கவும்.

23. தன்னார்வ நுகர்வோர் அமைப்பு பற்றி விவரிக்கவும்.
24. சரக்குகள் மற்றும் சேவைகள் வரி குழுவின் செயல்பாடுகள் யாவை?
25. தாராள மயமாக்கல் என்றால் என்ன?
26. தற்போதைய சரக்கு என்பதை விவாதிக்க
27. இரண்டு வகை கீறல்களை விவரி.
28. தொழில் முனைவோர் மற்றும் அக தொழில் முனைவோர் இவர்களை வேறுபடுத்துக.
29. பொருளின் உரிமையை உடனே மாற்றி விடக் கூடிய நடவடிக்கைகள்______என்றும், உரிமையை எதிர்காலத்தில் மாற்றும் நடவடிக்கைகளுக்கு ______நடவடிக்கைகள் என்றும் அழைக்கப்படுகிறது

பிரிவு – IV (2*5=10)

குறிப்பு: அனைத்து வினாக்களும் விடையளி.

30. வியாபாரத் திழன் நுண்ணிய சூழல் காரணிகளை விளக்கு.

*(அல்லது)*

எல்பிஜி (LPG)யின் தாக்கத்தை விளக்குக.

31. நிபந்தனை மற்றும் நம்புறுதிகளை வேறுபடுத்துக.

(அல்லது)

மகளிர் தொழில் முனைவோர் சந்திக்கும் பிரச்சனைகளை விவாதிக்க.



Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

**+2 வணிகவியல்** 2ஆம் இடைப்பருவத் தேர்வு நவ -22

1.(அ) 1960
2.(ஈ) மேலே உள்ள அனைத்தும்
3.(ஆ) சரக்குகள் மற்றும் சேவைகள் வரி
4.(ஆ) 1991
5.(இ) உலகமயமாக்கல்
6.(இ) பொருளின் மீதான அனுபவபாத்தியம் வைத்திருப்பவர்
7.(இ) 1930
8.(அ) 3 மாதங்கள்
9.(ஆ) 1881
10(ஈ) அனைத்தும்
11.(அ) கணக்கியல் பணி
12.(ஈ) ஆ மற்றும் இ
13.(அ) AIM
14.(அ) i ii iii iv V
15.(அ) (A) மற்றும் (R) சரி மேலும் (R) என்பது சரியான விளக்கம்

**ஏதேனும் 5 வினாக்களுக்கு விடையளி 5X2=10**

**16. மாநில ஆணையத்தின் உறுப்பினர்கள் யார்?**
உயர்நீதிமன்றத்தின் நீதிபதியாக சம்பந்தப்பட்ட மாநில அரசால் பதவி அமர்த்தப்பட்ட நபர் அந்த ஆணையத்தின் தலைவராக நியமிக்கப்படலாம். பொருளாதாரம், சட்டம், வணிகம் மற்றும் தொழில் நிர்வாகம் போன்ற துறைகளில் ஏற்படும் சிக்கல்களைக் கையாளும் திறமை கொண்டவர்களையும் நியமிக்கலாம்.

**17. VUCA** – விரைவான தொழில்நுட்ப வளர்ச்சியின் காரணமாக வணிகத்தின் எதிர்கால சூழலை சுருக்கமாக ஏற்ற இறக்கம், நிச்சயமற்ற தன்மை சிக்கலான தன்மை மற்றும் தெளிவற்றத் தன்மை கொண்டவை என்று **VUCA** – ஐ கூறலாம்.

**18. தனியார்மயமாக்கல்:** பொதுத் துறைக்கு ஒதுக்கப்பட்ட தொழில்களை தனியார் துறைக்கு மாற்ற அனுமதி அளிப்பதாகும்.

**19. நிகழ்சரக்கு சரக்கு:** இது ஒரு வகை எதிர்கால சரக்கு ஆகும். இது விற்பவர் கைவசம் வந்து சேர்வது, எதிர்காலத்தில் நடக்கும், நிகழ்ச்சியைப் பொறுத்தது.

**20. மேலெழுதல் வரையறு.**மாற்றுமறை ஆவணச் சட்டம் பிரிவு 15 மேலெழுத்து என்பதற்கு பின்வருமாறு இலக்கணம் தருகிறது. மாற்று முறையாவணத்தை எழுதியவர் அல்லது உடையவர் ஆணை மாற்று செய்ய வேண்டி எழுதியவர் என்ற நிலையில் அதன் முன்புறமோ அல்லது பின்புறமோ அத்துடன் இணைக்கப்பட்ட ஒரு தாளிலோ கையொப்பம் இடுதலை மேலெழுதல் என்பர்.

**21. மாதிரியைப் பின்பற்றும் தொழில் முனைவோர்**
மாதிரியை பின்பற்றும் தொழில் முனைவோர்கள் தற்போது சந்தையில் கிடைக்கும் பொருள்களை தங்களின் அறிவு ஆற்றல், வல்லமையை வைத்துக் கொண்டு வேறு முறையில் வடிவமைப்பவர்கள். இவர்கள் மேலை நாடுகளில் வடிவமைக்கப்பட்ட பொருட்கள் தங்களின் உள்ளூர் தேவைக்கு ஏற்றபடி உருமாற்றி வெளியிடுபவர்கள்.

**22.வேளாண் தொழில் முனைவோர்**

**ஏதேனும் 5 வினாக்களுக்கு விடையளி 5X3=15**

**23. தன்னார்வ நுகர்வோர் அமைப்பு பற்றி விவரிக்கவும்.** தன்னார்வ நுகர்வோர் அமைப்பு என்பது நுகர்வோரின் உரிமை மற்றும் நலனை பாதுகாத்திட ஏற்படுத்தப்பட்டதாகும். நுகர்வோர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துதல். நுகர்வோர் பாதுகாப்பை வலுப்படுத்துதல்.

**24. சரக்குகள் மற்றும் சேவைவரி குழுவின் செயல்பாடுகள்:** சரக்குகள் மற்றும் சேவைகள் வரிவிலக்கு, மேல் வரி விலக்கு அளிக்கப்பட்ட பொருட்கள் மற்றும் சேவைகள். பொருட்கள் சேவை வரிகளின் தரவரிசைகளின் தர விகிதங்கள் உட்பட.

**25. தாராளமயமாக்கல்** என்பது வணிக நடைமுறைகளில் உள்ள சட்டதிட்டங்களை அல்லது வழிகளை பொருளாதாரத்தில், சந்தை நல்ல நிலையை அடைய அரசாங்கம் கட்டுப்பாடுகளை தளர்த்துவது ஆகும்.

.

**26. தற்போதைய / இருக்கின்ற சரக்கு** ஒப்பந்தம் செய்யும் போது விற்பனையாளரின் கைவசம் உள்ள சரக்கு இருக்கின்ற சரக்கு ஆகும். விற்பனை செய்ய முகவரின் வசம் ஒப்படைக்கப்பட்ட சரக்கும், அடமானம் பெற்றவர் விற்கும் அடமான சொத்தும் உள்ளடங்கும்.

**27. இரண்டு வகைக் கீறல்களை விவரி**
**பொதுக்கீறலிடல்:-** காசோலையின் இடது மேல் மூலையில் இரு இணையான சாய் கோடுகளையோ அல்லது கோடுகளிடையே அண்டு கம்பெனி என்று இடுவதாகும்.
**சிறப்புக்கீறலிடல்:-** ஒரு வங்கியின் பெயரை செலவாணித் தன்மையற்றது என்று சொல்லுடனோ அல்லது தனித்தோ ஒரு காசோலையின் குறுக்கே சேர்ந்தால் அது சிறப்புக் கீறல் எனப்படும்.



Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

| 28. அடிப்படை | தொழில் முனைவோர் | அகத்தொழில் முனைவோர் |
|---|---|---|
| சிந்தனை | தடையற்ற சிந்தனைவாதி | தன்னிச்சையான சிந்தனைவாதி |
| சார்பு நிலை | தன்னிச்சையான நபர் | தொழில் முனைவோரை சார்ந்தது இருப்பவர் |
| நிதி திரட்டல் | சொந்தமுயற்சியில் நிதியை திரட்ட வேண்டும் | நிதியை திரட்ட வேண்டிய பொறுப்பு இல்லை |
| வெகுமதி | இலாபத்தில் பங்கு உண்டு | ஊதியம் பெற வாய்ப்பு உண்டு |
| இடர் ஏற்றல் | இடரை கட்டாயம் ஏற்க வேண்டும் | இடரை ஏற்க வேண்டியதில்லை. |

**29.**பொருளின் உரிமை உடனே மாற்றம் **விற்பனை** உரிமை எதிர்காலாத்தில் மாற்றம் **விற்பனை உடன்பாடு**

**அனைத்து கேள்விகளுக்கும் விடையளி: 2X5=10**

**30.அ. வியாபாரத்தின் நுண்ணிய சூழல் காரணிகளை விளக்குக.**

**நிதி அளிப்பவர்:-** வணிகம் சிறந்த முறையில் இயங்க முக்கிய பங்கு வகிப்பவர்கள் கடனீட்டு பத்திரதாரர்கள் மற்றும் நிதி நிறுவனங்கள் ஆகும்.

**சரக்கு விற்பனையாளர்கள்:-** சரக்கு விற்பனையாளர்களின் முக்கியத்துவத்தை நிறுவனங்கள் உணர்ந்து அவர்களுடன் நல்ல உறவை வளர்க்க வேண்டும்.

**சந்தையிடுகைஇடைநிலையர்கள்:-**இவர்கள் நிறுவனத்தையும்,நுகர்வோரையும்இணைக்கும்பாலமாக திகழ்கின்றனர்.

**வாடிக்கையாளர்கள்:-** வாடிக்கையாளரே வணிகத்தின் மன்னராக கருதப்படுகிறார். வியாபாரத்தின் நோக்கம் அதன் வாடிக்கையாளரின் தேவையை நிறைவேற்றுவதாகும்..

**போட்டியாளர்கள்:-** அனைத்து நிறுவனங்களும் எல்லா நிலைகளிலும் போட்டியை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

**30.ஆ. இந்தியப் பொருளாதாரத்தில் LPG- யின் தாக்கத்தை விளக்குக?**

புதிய வெளிநாட்டு வர்த்தக ஒப்பந்தங்களை அறிமுகம் செய்வது.

வணிகக் கட்டுப்பாடுகளை அகற்றுதல்.

பல்வேறு பொருள்களுக்கு புதிய சந்தை வாய்ப்பை உருவாக்கியது.

வெளிநாட்டு நேரடி முதலீட்டை உருவாக்குகிறது.

நுகர்வோர் பொருட்களின் சந்தையை பெருக்கிட உதவியது

| 31.அ.அடிப்படை | நிபந்தனை | நம்புறுதி |
|---|---|---|
| பொருள் | இது ஒப்பந்தத்தின் கருப்பொருளாகும். | இது ஒப்பந்தத்தின் துணையாகும். |
| முக்கியத் துவம் | ஒப்பந்தத்தில் நிபந்தனையை மீறுவது ஒப்பந்தத்தையே மீறுவதாகக் கருதப்படும். | நம்புறுதியை மீறுவது ஒப்பந்தத்தின் மீறுவது ஆகாது. |
| உரிமை மாற்றம் | நிபந்தனை நிறைவேற்றாமல் உரிமை மாற்றம் நிகழ முடியாது. | நம்புறுதியை நிறைவேற்றாமல் உரிமை மாற்றம் நிகழலாம். |
| தீர்வு | நிபந்தனையை மீறினால் ஒப்பநதத்தால் பாதிக்கப்பட்ட நபர் ஒப்பந்தத்தை நீக்கிக் கொள்வதுடன் நட்டஈடு கோரும் உரிமையைப் பெறுகிறார். | நம்புறுதியை மீறுவதனால் ஒப்பந்தத்தில் பாதிக்கப்பட்டவர் நட்ட ஈடு கேட்கும் உரிமையை மட்டுமே பெற்றுள்ளார். |

31.ஆ. **மகளிர் தொழில் முனைவோர் சந்திக்கும் பிரச்சனைகளை விவாதிக்க.**

**நிதிப்பிரச்சனை:-** மகளிர் தொழில் முனைவோர்களுக்கு தங்களின் தொழிலில் ஏற்படும் நிதிப்பற்றாக்குறையை சமாளிப்பது மிகப்பெரிய சவாலாக உள்ளது.

**ஆதரவு இன்மை:-** கணவன், பிள்ளைகள், பெற்றோர்கள், நண்பர்கள் அருகில் வசிப்பவர்கள் என பலரின் ஒத்துழைப்பு தேவைப்படுகிறது.

**கடும் போட்டி:-** மகளிர் தொழில் முனைவோர்கள் தொழில் கடுமையான போட்டியை எதிர் கொள்கின்றனர்.

**கல்வியறிவு இன்மை:-** குறைவாக படித்துள்ள மகளிர் தொழில் முனைவோர்கள் தொழில் தொடர்பான கருத்துக்களை முழுவதுமாக புரிந்து கொள்ள முடியவில்லை.

**சார்ந்து வாழும் கலாச்சாரம்:-** பல சம்பவங்களில் மகளிர் தன் வாழ்நாள் முழுவதும் நம் நாட்டில் பிறரை சார்ந்து வாழ்ந்து வருகின்றனர்.